1972 ஆகஸ்டு 18]

ஊராட்சி மன்றங்கள்

* 153 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறிய ஊராட்சிகளுக்கு (Minor Panchayats) அதிக பட்ச வாக்காளர்கள் எவ்வளவு பேரென வரையறுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : ஒரு கிராமப் பஞ்சாயத்தில் 250 வாக்காளர்கள் மட்டுமே இருக்கிறார்கள், ஒரே ஒரு ஊர் மட்டுமே அடங்கி இருக்கிறது. இன்னொரு கிராமப் பஞ்சாயத்தில் ஐயாயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்களும், பத்துப் பதினைந்து ஊர்களும் அடங்கி இருக்கின்றன. இந்த மாறுபாட்டைப் போக்கி ஒரே சீரான கிராமப் பஞ்சாயத்துக்களாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆங்காங்கு இருக்கும் தேவைகளுக்கேற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. 600 மக்களுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டிருந்தால் அவர்கள் ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கலாம். மக்கள் தொகை 600-ல் இருந்து 800 வரை ஆறு உறுப்பினர்கள், 800-ல் இருந்து ஆயிரம் வரை ஏழு உறுப்பினர்கள், 1,000-ல் இருந்து 1,200 வரை எட்டு உறுப்பினர்கள். 1,200-ல் இருந்து 1,500 வரை ஒன்பது உறுப்பினர்கள், 1,500 முதல் 2,000 வரை பத்து உறுப்பினர்கள், 2,000 முதல் 3,000 வரை பதினொரு உறுப்பினர்கள் ; 3,000 முதல் 5,000 வரை பன்னிரண்டு உறுப்பினர்கள், இந்த அடிப்படையில்தான் இப்போது ஊராட்சி மன்றங்களுடைய தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. குறைந்த அளவு உறுப்பினர்கள் ஐந்து பேர், அதிக அளவு உறுப்பினர்கள் 12 பேர். 15,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகை வரும்போது பேரூராட்சி என்று அமைந்து 15 பேர் உறுப்பினர்கள் இருப்பார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : ஊராட்சி மன்றங்களை அமைக்கும் போது 500 ஜனத்தொகை இருந்தாலும் ஊராட்சி மன்றமாக அமைக்கும்போது குறைந்த ஜனத்தொகை இருப்பதால்

[1972 ஆகஸ்ட் 18

வருமானம் குறைவாக இருந்து சீராக நடத்த முடியாத நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் 2,000 ஜனத்தொகைக்குக் குறையாமல் ஒரு ஊராட்சி மன்றம் அமைக்கப்பட வேண்டுமென்ற முறையில் சீர்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த அடிப்படையில் கூட சில இடங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று கிராமங்கள் சேர்ந்து ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கூடுமான வரையில் தனித்து இயங்கக்கூடிய வசதியும், வாய்ப்பும் பெற்றவைகளாக அமைய வேண்டுமென்ற அடிப்படையில் ஊராட்சி மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போன்று அமைத்துக் கொள்வதில் எந்தவிதத் தடையும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சிறு சிறு பஞ்சாயத்துக்களாக அமைந்திருக்கிற காரணத்தினால் பல பஞ்சாயத்துக்களுக்கு மின் கட்டணம் கூட கொடுப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. சிப்பந்திகளின் செலவுகளைக் கூட அவர்களால் பராமரிக்க முடியவில்லை. ஆதலால் இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு கன்னியாகுமரி ஜில்லாவிலாவது பரீட்சார்த்தமாக இதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஊராட்சி மன்றங்கள் இயங்கத் தக்க அளவிற்கு அமைய வேண்டும் என்ற கருத்தினைக் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளலாம். அதைப் பற்றி ஆராயும்படி செய்யப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு மூன்று கிராமங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு செய்வது என்பதற்கு அங்குள்ளவர்கள் விட்டுக்கொடுக்க முன்வரவேண்டியவர்களாக யிருக்கிறார்கள். தனித்தனி பஞ்சாயத்தாக இருந்தால் ஒவ்வொரு பஞ்சாயத்துக்குள் பிரசிடென்ட் என்று பிரசிடென்டாக இருக்க முடியும், அப்போதுதான் அவர்கள் யூனியனில் போய் உட்கார முடியும் என்ற அளவில் நிலைமை இருக்கிறது. மூன்றும் ஒன்றாகச் சேரும்போது ஒரு தலைவர்தான் இருக்கக்கூடிய நிலை ஏற்படும். அப்படிப்பட்ட சங்கடங்கள் இருப்பதால் கூடுமான வரையில் அந்தந்த ஊராட்சி மன்றங்கள் தங்கள் தங்கள் காலிலேயே நின்று இயங்கும் அளவிற்கு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை

அடிப்படையாக வைத்து ஊராட்சி மன்றங்களைக் கண்காணித்து வருகிற இயக்குநர் திட்டம் தீட்டி வருகிறார்கள். அந்த வகையில் ஆராயப்படலாம்.

திரு. நா. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் விடை மிகவும் விளக்கமாக இருக்கிறது. இதற்கு மேல் துணைக் கேள்விகளுக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன். ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல் இரண்டு மூன்று கிராமங்களை ஒன்றாகச் சேர்த்துத் தேர்தல் நடத்தினால் யார் தலைவராக வருகிறார்களோ அவர்கள் ஊர் மட்டும்தான் கவனிக்கப்படும் என்ற நிலையில் ஏற்கனவே அதைப் பரிசீலனை செய்துதான் தனித்தனியாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆகவே அதை மனதில் வைத்துக் கொண்டு இப்போது இருக்கிற முறையையே நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியாக இயங்கலாம் என்ற அளவிலும், இரண்டு மூன்று கிராமங்களை ஒன்று சேர்த்து அமைக்கலாம் என்பதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் தனித்தனியாகப் பிரிய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன. சிலயிடங்களில் சேர்ந்து இயங்குவதற்கும் எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் தன் காலிலேயே நிற்கத்தக்க அளவில் அமைய வேண்டும் என்பதுதான்.

Pension for employees of Local Bodies

* 154. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Municipalities including the Corporation of Madurai have passed resolutions granting pensions to employees who retired before 14th January 1970;

(*b*) if so, the details of the same; and

(*c*) the probable date of implementation of the same?